DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.159 /2019

Deposition of Witness : PW1

| Name | சிவா | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | திருநாவுக்கரசு | Village | |
| Age | 59 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **20.11.2025.** | | | |

( Accused Present )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் Furniture கடை வைத்துள்ளேன், அது தவிர்த்து வேறு எதுவும் தொழில் செய்யவில்லை. எதிரி எனது கடைக்கு வந்து பொருட்கள் வாங்க, போக இருப்பவர் என்ற முறையிலும், அவரிடமிருந்து நான் Grinder உதிரி பாகங்கள் நான் வாங்குவதன் மூலமும் எனக்கு பழக்கமானார். அதனால் அவர் கேட்டதனால் இவ்வழக்கு காசோலை தொகையை அவரிடம் கொடுத்தேன். எனது கடையில் பொருட்கள் வாங்குவது, விற்பது தொடர்பான அனைத்து கணக்குகளையும் நான் பராமரித்து வருகிறேன், அதற்கான உரிமத்தையும் வைத்துள்ளேன், GST-யும் முறையாக செலுத்தி வருகிறேன். எதிரி என்னிடமிருந்து ரூ.2,70,000/- பணம் வாங்கினார், அதனை அவர் திருப்பி தரவில்லை, அதற்கு பிணையாகவர் கொடுத்த காசோலையை எனது வங்கி கணக்கில் 15.04.2019 அன்று செலுத்தினேன். மேற்படி காசோலையானது எதிரி அவர் வங்கி கணக்கை முடித்துவிட்டதாக குறிப்பிட்டு எனக்கு திருப்பப்பட்டுவிட்டது. அதன் பின்னர் எனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு சட்டப்பூர்வ அறிவிப்பு ஒன்றினை அனைத்து விபரங்களையும் குறிப்பிட்டு கூறி அனுப்பினேன். எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்திற்கு பிணையாக ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, அதற்கு பிணையாகதான் காசோலை வாங்கிக் கொண்டேன். எனது வீட்டை அடமானம் போட்டு ரூ.10,00,000/-ஐ சென்ட்ரல் பேங்கில் வைத்திருந்தேன். அது ஆஜர் எதிரிக்கு தெரியும். அப்போது அவர் பணம் தேவை என்று என்னிடம் கேட்டார். அவ்வப்போது அவர் என்னிடம் ரூ.5,000/- , ரூ.10,000/-வாங்கி திருப்பி கொடுத்துவிடுவார் என்ற நம்பிக்கையில் இவ்வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகையை கடனாக அவருக்கு கொடுத்தேன். மேற்படி பணத்தினை எனது கடையில் வைத்து நான் அவருக்கு கொடுக்கும்பொழுது எங்களை தவிர வேறு யாரும் சாட்சிகள் இல்லை. நான் வங்கியில் பரிவர்த்தனைகள் மேற்கொண்டு கடன்

பெற்றுள்ள நிலையில் வங்கியின் நெறிமுறைகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும், அதனால் ஒரு நபருக்கு ரூ.20,000/-க்கு மேல் கடனாக கொடுக்கவேண்டுமென்றால் வங்கி காசோலை மூலம்தான் கொடுக்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு காசோலையில் பெயர், தேதி, தொகை ஆகிய விபரங்களை ஆஜர் எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார். ஆஜர் எதிரியின் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும் என்றாலும், ஆனால் அவர் சட்ட அறிவிப்பிற்கு தகுந்த பதில் கொடுக்க கூடாது என்ற காரணத்தினால்தான் அவர் வசிக்காத வீட்டு முகவரிக்கு சட்ட அறிவிப்பினை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. தரணி என்பவரை எனக்கு தெரியும், அவர் எனது கடைக்கு வருவார், போவார், ஆனால் இப்போது வருவதில்லை. மேற்படி தரணி தண்டல் தொழில் செய்கிறாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தரணி அவரது தண்டல் தொழில் தொடர்பான நோட்டுகளை எனது கடையில் வைப்பார் என்றால் அவ்வாறு வைப்பது கிடையாது. என்னிடம் காட்டப்படும் மேற்படி தரணி அவரது தண்டல் தொழில் தொடர்பான நோட்டு ஆவணங்கள் பற்றி எதுவும் எனக்கு தெரியாது. எதிரி தனது TMB வங்கி கணக்கை முடிக்கும்பொழுது தான் யார் யாருக்கு காசோலை கொடுத்துள்ளார் என்ற விபரத்தை வங்கி கணக்கு குறிப்பில் குறிப்பிட்டுள்ளார், அதில்இவ்வழக்கு காசோலைக்கான எண்-ஆனது மேற்படி தரணிக்கு கொடுக்கப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர் எது வேண்டுமானாலும் எழுதி இருப்பார். இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பெற்று இந்நீதிமன்றத்திற்கு 03.07.2019 அன்று வந்ததன் பின்னர்தான் எதிரிக்கு மேற்படி தரணிக்கு கொடுக்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கு எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எதிரிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. அதன் பிறகு எதிரியானவர் காவல் நிலையத்திற்கு சென்று மேற்படி தரணியிடமிருந்து பெற்ற ரூ.10,000/- கடனுக்கு பிணையாக கொடுத்த காசோலையானது எதிரிக்கு எதிராக தவறாக பயன்படுத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டு என் மீதும், தரணி மீதும் புகார் கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், பண்ருட்டி போலிசார் அதுப்பற்றி என்னிடம் விசாரித்தபொழுது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று கூறியபோது கேட்டு தெரிந்துகொண்டு சென்றுவிட்டனர்.

2. எதிரிக்கும், எனக்கும் இவ்வழக்கு காசோலை தொடர்பாக எவ்வித கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், இவ்வழக்கு காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், தரணியிடமிருந்து எதிரி பெற்ற ரூ.10,000/- கடனுக்கு பிணையாக கொடுத்த காசோலையானது எதிரிக்கு எதிராக தவறாக

பயன்படுத்தப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இவ்வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகையினை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டுதான் எதிரி என்னிடம் இவ்வழக்கு காசோலையை கொடுத்தார் என்பதற்கு எவ்வித ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.